
அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

**Dr. Ravindran A/L Maraya**

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

**Dr Silllalee A/L S.Kandasamy**

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.



**Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan**

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# இசை



# பாபநாசம் சிவனின் தமிழ்க் கீர்த்தனைகளில் தமிழ் மொழியியலும் இராக பாவ வெளிப்பாடும்

# *Linguistic Features of Tamil and the Expression of Raga Bhava in Papanasam Sivan's Tamil Kirtana-s*

**இராகவன் பிருந்தா,** போதனாசிரியர், இசைத்துறை, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. *ORCID iD - 0009-0006-5809-7441*

*Ragavan Brindha,Instructor in Music, Department of Music,Swamy Vipulananda Institute of Aesthetic Studies,Eastern University, Sri Lanka ORCID iD - 0009-0006-5809-7441*

### *Abstract*

*Among the music scholars who established the place of Tamil kirtana-s in the Carnatic music tradition, Papanasam Sivan is particularly notable. His compositions integrate the literary qualities of the Tamil language with the raga frameworks of Carnatic music. His kirtana-s are characterized by devotional content, a simple linguistic style, swarakshara alignment, and a textual (Sahitya) structure that harmonizes with raga sanchara-s (Melodic phrases).Previous studies have focused on Papanasam Sivan's contributions from the perspectives of devotional literature, the Tamil Isai (Tamil Music) movement, and concert traditions. However, there are relatively few studies that systematically analyse, from a musicological basis, the relationship between the phonetic features of the Tamil language and the expression of raga bhava (The emotive essence of a raga). This study undertakes a musicological and linguistic analysis of three selected Tamil kirtana-s by Papanasam Sivan. It examines the phonetic structure of vowels and consonants, the use of short (Kuril) and long (Nedil) syllables, word pronunciation, and how these align with raga sancharas. Additionally, the selection of ragas, the application of gamaka-s (Ornamentations), the compatibility between sahitya and raga, and emotional expression are also analysed. The findings indicate that the phonetic characteristics of the Tamil language contribute to the expression of raga sentiment in Carnatic music. And Papanasam Sivan's kirtana-s serve as exemplary models for studying the relationship between language and music. This study underscores the necessity of regarding Tamil kirtana-s not merely as devotional songs but also as primary sources for musicological and linguistic research.*

***Keywords:*** *Papanasam Sivan, Tamil kirtana-s, Raga bhava, Tamil Linguistics, Carnatic Music*

### ஆய்வுச் சுருக்கம்

கர்நாடக இசை மரபில் தமிழ்க் கீர்த்தனைகளின் இடத்தை உறுதிப்படுத்திய இசைப்புலவர்களில் பாபநாசம் சிவன் குறிப்பிடத்தக்கவர். இவரது பாடல்கள் தமிழ் மொழியின் இலக்கியப் பண்புகளையும், கர்நாடக இசையின் இராக அமைப்புகளையும் ஒருங்கிணைத்து அமைகின்றன. இவரது கீர்த்தனைகள் பக்தி சார்ந்த உள்ளடக்கம், எளிமையான மொழிநடை, ஸ்வராக்ஷரப் பொருத்தம் மற்றும் இராக சஞ்சாரங்களுடன் இயைபுறும் சாகித்ய அமைப்பு

போன்ற பண்புகளைக் கொண்டுள்ளன. முந்தைய ஆய்வுகள் பாபநாசம் சிவனின் பங்களிப்பை பக்தி இலக்கியம், தமிழிசை இயக்கம் மற்றும் கச்சேரி மரபு ஆகிய கோணங்களில் மையப்படுத்தியுள்ளன. எனினும், தமிழ் மொழியின் ஒலியியல் கூறுகளுக்கும் இராகபாவ வெளிப்பாட்டிற்கும் இடையிலான தொடர்பை இசையியல் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யும் ஆய்வுகள் குறைவாகவே உள்ளன. இங்கு பாபநாசம் சிவனின் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று தமிழ்க் கீர்த்தனைகளை இசையியல் மற்றும் மொழியியல் முறையில் பகுப்பாய்வு செய்கிறது. குறிப்பாக, உயிர்—மெய்யெழுத்துகளின் ஒலியியல் அமைப்பு, குறில் மற்றும் நெடில் எழுத்துகளின் பயன்பாடு, சொற்களின் உச்சரிப்பு மற்றும் அவை இராக சஞ்சாரங்களுடன் இணையும் விதம் ஆகியன ஆராயப்படுகின்றன. மேலும், இராகத் தேர்வு, கமகப் பயன்பாடு, சாகித்ய—இராக ஒற்றுமை மற்றும் உணர்ச்சி வெளிப்பாடு ஆகியனவும் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இதன் முடிவுகள், தமிழ் மொழியின் ஒலியியல் பண்புகள் கர்நாடக இசையில் இராக உணர்வின் வெளிப்பாட்டிற்குப் பங்களிக்கின்றன என்பதைக் காட்டுகின்றன. மேலும், பாபநாசம் சிவனின் கீர்த்தனைகள் மொழிக்கும் இசைக்கும் இடையிலான தொடர்பை ஆய்வு செய்வதற்கான மாதிரிகளாக விளங்குகின்றன. தமிழ்க் கீர்த்தனைகள் பக்திப் பாடல்களாக மட்டுமின்றி, இசையியல் மற்றும் மொழியியல் ஆய்வுகளுக்கான முதன்மை ஆதாரங்களாகக் கருதப்பட வேண்டியதன் அவசியத்தை இவ்வாய்வு சுட்டிக்காட்டுகிறது.

**திறவுச்சொற்கள்:** பாபநாசம் சிவன், தமிழ்க் கீர்த்தனைகள், இராகபாவம், தமிழ் மொழியியல், கர்நாடக இசை

**அறிமுகம்**

கர்நாடக இசை தென்னிந்தியப் பண்பாட்டு மரபின் முக்கியமான கலை வடிவங்களில் ஒன்றாகும். இம்மரபில் இராகம், தாளம் மற்றும் சாகித்யம் ஆகிய கூறுகள் ஒன்றோடொன்று இணைந்து இசை வெளிப்பாட்டை உருவாக்குகின்றன. கீர்த்தனை வடிவம் கர்நாடக இசையின் மைய அங்கமாகக் கருதப்படுகிறது. 18 மற்றும் 19ம் நூற்றாண்டுகளில் தியாகராஜ சுவாமிகள், முத்துஸ்வாமி தீக்ஷிதர் மற்றும் சியாமா சாஸ்திரிகள் ஆகியோர் இயற்றிய தெலுங்கு மற்றும் சமஸ்கிருத கீர்த்தனைகள் கர்நாடக இசை மேடைகளில் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தன (Sambamoorthy, 1998). இதன் காரணமாக, தமிழ் மொழியில் இயற்றப்பட்ட கீர்த்தனைகள் ஒப்பீட்டளவில் குறைந்த அளவிலேயே கச்சேரிகளில் பாடப்பெற்றன.

இச்சூழலில், தமிழ் மொழியின் இசைத்திறனை கர்நாடக இசை மேடைகளில் முன்னிலைப்படுத்திய இசைப்புலவர்களில் பாபநாசம் சிவன் ஒருவர். தமிழ் மொழியில் நூற்றுக்கணக்கான கீர்த்தனைகளை இயற்றிய இவர், தமிழிசை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தார். இவரது பாடல்களின் சிறப்பியல்புகளாக பக்தி உள்ளடக்கம், இலக்கிய நயம், எளிய மொழிநடை மற்றும் இராகபாவ வெளிப்பாடு ஆகியன அடையாளம் காணப்படுகின்றன.

பாபநாசம் சிவனின் கீர்த்தனைகளின் ஒரு மையப் பண்பு, தமிழ் மொழியின் ஒலியியல் அமைப்புக்கும் இசை வெளிப்பாட்டுக்கும் இடையிலான இயைபாகும். தமிழ் மொழியின் குறில், நெடில் எழுத்துகள், திறந்த ஒலியமைப்புகள் மற்றும் உயிர், மெய்யெழுத்துகளின் பண்புகள் ஆகியன இராக சஞ்சாரங்களுடன் இணைந்து இசை ஓட்டத்தைப் பாதிக்கின்றன. 'கா வா வா', 'காபாலி', 'கற்பகாம்பிகே' போன்ற கீர்த்தனைகளில் சாகித்யத்திற்கும் இராகத்திற்கும் இடையிலான தொடர்பு தெளிவாகக் காணப்படுகிறது.

இந்த ஆய்வின் நோக்கமும் எல்லைகளும்: இந்த ஆய்வு, பாபநாசம் சிவனின் மூன்று தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்க் கீர்த்தனைகளை மட்டும் மையப்படுத்தி, அவற்றின் மொழியியல் மற்றும் இசையியல் பண்புகளைப் பகுப்பாய்வு செய்கிறது. இவரது பிற பாடல்கள் அல்லது பிற தமிழிசைப் பாடல்களுடனான ஒப்பீடு இந்த ஆய்வின் எல்லைக்கு உட்பட்டதல்ல. மேலும், இசை உளவியல் அல்லது ரசிகர்களின் உணர்வுப் பதிவு போன்ற அம்சங்கள் இங்கு ஆராயப்படவில்லை.

பகுப்பாய்வுக் கட்டமைப்பு: தமிழ் மொழியியலும் இசை வெளிப்பாடும்

தமிழ் மொழியின் உயிரெழுத்து அமைப்பு மற்றும் அதன் ஒலியியல் பண்புகள் இசை வெளிப்பாட்டிற்கு உகந்ததாகக் கருதப்படுகின்றன. குறிப்பாக, குறில் மற்றும் நெடில் ஒலிகளுக்கிடையேயான வேறுபாடும், உயிர் மற்றும் மெய்யெழுத்துகளின் இணைவும் இராக சஞ்சாரங்களில் இசை ஓட்டத்தை வடிவமைக்கின்றன.

பாபநாசம் சிவனின் பாடல்களில் காணப்படும் சொற்பொருத்தம் இசை உச்சரிப்பிற்கு ஏற்றதாக அமைகிறது. 'கா வா வா', 'காபாலி', 'கற்பகாம்பிகே' போன்ற பாடல்களில் நெடில் உயிரெழுத்துகள் (கா, வா, பா) இராக விரிவாக்கத்திற்கு இடமளிக்கின்றன. இதன் மூலம், கமகங்களின் பயன்பாட்டிற்குத் தேவையான ஒலியியல் இடைவெளி உருவாகிறது.

தமிழ் மொழியின் ஒலியியல் பண்புகளுக்கும் இசை வெளிப்பாட்டின் சஞ்சாரத்திற்கும் இடையிலான இணைவு இராகபாவத்தின் ஒரு அங்கமாகச் செயல்படுகிறது. இக்கருத்து, மொழி மற்றும் இசை ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று சார்ந்த அமைப்புகளாக இயங்குகின்றன என்பதைக் குறிக்கிறது.

**பகுப்பாய்வு முறை**

இந்த ஆய்வுக்காக, பாபநாசம் சிவனின் *கீர்த்தனை மாலை* (1939) முதல் சதகத்திலிருந்து மூன்று கீர்த்தனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன:

1. 'கா வா வா கந்தா வா' (இராகம்: வராளி, தாளம்: ஆதி)

2. 'காபாலி' (இராகம்: மோகனம், தாளம்: ஆதி)

3. 'கற்பகாம்பிகே' (இராகம்: பிலஹரி, தாளம்: ரூபகம்)

ஒவ்வொரு கீர்த்தனையும் பின்வரும் விடயங்கள் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டது:

- ஒலியியல் அமைப்பு: உயிர், மெய்யெழுத்துகளின் பண்புகள் மற்றும் குறில், நெடில் பயன்பாடு.
- இராக அமைப்பு: தேர்ந்தெடுக்கப்பட்ட இராகத்தின் பண்புகள், கமகப் பயன்பாடு.
- சாகித்ய- இராக ஒற்றுமை: சொற்களின் ஒலியமைப்புக்கும் இராக சஞ்சாரங்களுக்கும் இடையிலான தொடர்பு.
- சங்கதி அமைப்பு: சங்கதிகளின் ஒப்பீட்டு பகுப்பாய்வு.

பகுப்பாய்வு முடிவுகள்

1. 'கா வா வா கந்தா வா'

| பகுப்பாய்வுக் கூறு | விளக்கம் |
|---|---|
| இராகம் | வராளி |
| தாளம் | ஆதி |
| ஒலியியல் பண்புகள் | 'வா' என்ற நெடில் ஒலியின் தொடர்ச்சியான பயன்பாடு காணப்படுகிறது. 'கா', 'வா', 'முருகா' போன்ற திறந்த உயிரொலிகள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. |
| இராகப் பண்புகள் | வராளி இராகம் கருணை சார்ந்த பாவத்தை வெளிப்படுத்தும் இராகமாக அறியப்படுகிறது. |
| சாகித்ய- இராக ஒற்றுமை | 'வா' என்ற நெடில் ஒலியின் தொடர்ச்சி, இராகத்தின் கருணைப் பண்புடன் இயைபுறுகிறது. தமிழ் உச்சரிப்பின் திறந்த ஒலியமைப்பு, வராளி இராகத்தின் கமக சஞ்சாரங்களுக்கு இடமளிக்கிறது. |

இசை எடுத்துக்காட்டு (சிவன், 1939, ப. 242):

<table>
<tr><td rowspan="2">1.</td><td>கரிகரி கரிகரி கரிகத பமகரிஸ |</td><td>ஸ நிஸரி கரி ரிஸ |</td><td>ஸா, கக ரிஸ ரிக கரி ஸரி ||</td></tr>
<tr><td>கா வா வா கந் தா வா வா எனை |</td><td>க்கா வா. வே . லா . |</td><td>வா . பழநிமலையுறையுமுரு ||</td></tr>
<tr><td rowspan="2">2.</td><td>“ “ கரி கமபா மாபத பா , த , ரிஸ |</td><td>“ |</td><td>“ ||</td></tr>
<tr><td>கந் தா வா எனை |</td><td>“ |</td><td>“ ||</td></tr>
</table>

கவனிப்பு:

முதலாவது சங்கதியுடன் ஒப்பிடுகையில், இரண்டாவது சங்கதியின் பூர்வாங்க பாகத்தில் அதிக அளவிலான கமகப் பயன்பாடு காணப்படுகிறது. இது சாகித்யத்தின் பாவத்துடன் இராகச் சாயலின் தொடர்பை அதிகரிக்கிறது.

**2.** 'காபாலி'

| பகுப்பாய்வுக் கூறு | விளக்கம் |
|---|---|
| இராகம் | மோகனம் |
| தாளம் | ஆதி |

| | |
|---|---|
| ஒலியியல் பண்புகள் | 'காபாலி' என்ற சொல்லில் நெடில் ஒலிகள் (கா, பா, லி) பயன்படுத்தப்பட்டுள்ளன. |
| இராகப் பண்புகள் | மோகன இராகம் பிரகாசமான சாயலையும் எளிய சஞ்சாரங்களையும் கொண்டது. |
| சாகித்ய-இராக ஒற்றுமை | நெடில் ஒலிகள் மோகன இராகத்தின் பிரகாசமான சஞ்சாரங்களுடன் இயைபுறுகின்றன. ஸ்வராக்ஷரப் பயன்பாடு காணப்படுகிறது. |

இசை எடுத்துக்காட்டு (சிவன், 1939, ப. 307):

| | | | |
|---|---|---|---|
| 1. | கா ; கபா, கரீ , ஸா ; | ப த ஸ் ஸ்த தப ப க க | கக தப பகரீ ஸ ரி \|\| |
| | கா பா . லி . . | கருணை நி . லவுபொ . ழி | வதநமதி . ய னொரு \|\| |
| 3. | ஸரிகபதஸ் , ; , பா , கரீ , ஸா ; | க் ரி ஸ் ரிஸ்த ப த | பத ரிஸ்ஸ்ததபபகதப கரிஸரி \|\| |
| | கா . . . . . பா . லி . | கருணை நிலவு பொழி | வ . த . ந . ம . தி ய னொ . ரு \|\| |

கவனிப்பு:

முதலாவது சங்கதியில் ஸ்வராக்ஷர அமைப்பு காணப்படுகிறது. மூன்றாம் சங்கதியில், நெடில் ஸ்வரங்களுக்கு நெடில் சொற்களும், குறில் ஸ்வரங்களுக்குக் குறில் சொற்களும் பொருத்தப்பட்டுள்ளன. சொற்களின் பொருளுக்கும் ஸங்கதி அமைப்புக்கும் இடையிலான தொடர்பு தெளிவாகிறது.

3. 'கற்பகாம்பிகே'

| பகுப்பாய்வுக் கூறு | விளக்கம் |
|---|---|
| இராகம் | பிலஹரி |
| தாளம் | ரூபகம் |
| ஒலியியல் பண்புகள் | 'கற்பகாம்பிகே', 'கடைக்கண்', 'காத்தருள்', 'கருணாகரி' போன்ற சொற்களின் இயல்பான உச்சரிப்புப் பண்புகள் காணப்படுகின்றன. |
| இராகப் பண்புகள் | பிலஹரி இராகம் பக்தி சார்ந்த உணர்ச்சி வெளிப்பாட்டிற்கு உகந்ததாக அறியப்படுகிறது. |

| | |
|---|---|
| சாகித்ய- இராக ஒற்றுமை | பிலஹரி இராகத்தின் மென்மையான உணர்ச்சி வெளிப்பாடு தமிழ்ச் சொற்களின் ஒலியியல் பண்புகளுடன் இயைபுறுகிறது. |

இசை எடுத்துக்காட்டு (சிவன், 1939, ப. 229):

| | | |
|---|---|---|
| 2. | க ரி கா பா தா ; க் ரி \|\| | ரி ஸ் ஸா ; ; , ப தா \|\| |
| | . . கற் ப காம் பி . \|\| | கே . . கடைக் \|\| |
| | த த க் ரி ஸ் நி தா ப ப தா \|\| | தரி ஸ்ஸ்நிதபபா தபதம \|\| |
| | கண் . . . பா . . ர்த்தெனைக் \|\| | கா . . த்த . ருள் கருணா . \|\| |
| 3. | கரி கா பா தா ; க் ˙ரி \|\| | ˙ரி ஸ் ஸா ; ; , ப தா \|\| |
| | கரி கற் ப காம் பி . \|\| | கே . . கடைக் \|\| |
| | த த க் ˙ரி ஸ் நி தா ப ப தா \|\| | ˙ரி நி ˙ரி நீ த ப பா த ப த ம \|\| |
| | கண் . . . பா . . ர்த்தெனைக் \|\| | கா . . த் த . ருள் கருணா . \|\| |

கவனிப்பு:

இக்கீர்த்தனை ஸ்வராக்ஷர அமைப்புடன் ஆரம்பிக்கிறது. மூன்றாம் சங்கதியில், உத்தராங்க பகுதியில் 'காத்தருள்' சொற்றொடர் தார ஸ்தாயி ரிஷபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இது மன்றாடும் மனோநிலையின் இசை வெளிப்பாடாகக் கருதப்படலாம்.

விவாதம்

மேற்கண்ட பகுப்பாய்வின் முடிவுகள் பின்வரும் கூறுகளைச் சுட்டிக்காட்டுகின்றன:

முதல் கூறு: தமிழ் மொழியின் குறில் மற்றும் நெடில் பிரயோகங்கள் இராக விரிவாக்கத்திற்கு உதவுகின்றன. நெடில் எழுத்துகள் அதிக அளவில் உள்ள பாடல்களில் (எ.கா., 'காபாலி') இராகத்தின் கமக வெளிப்பாடு அதிக இடத்தைப் பெறுகிறது.

இரண்டாம் கூறு: தமிழின் மெய்யெழுத்துகளின் பிரயோகங்கள் இராகங்களின் கமக வெளிப்பாட்டை இயல்பாக்குகின்றன. தமிழின் திறந்த ஒலியமைப்பு கமகங்களுக்குத் தேவையான காற்றோட்டத்தை அனுமதிக்கிறது.

மூன்றாம் கூறு: பாபநாசம் சிவன், மொழியின் எளிய நடையைப் பயன்படுத்துவதன் மூலம் இராகபாவ வெளிப்பாட்டை நேரடியாகச் செய்துள்ளார். இவரது பாடல்களில் சாகித்யத்தின் பொருளுக்கும் இராகத் தேர்வுக்கும் இடையிலான தொடர்பு தெளிவாகக் காணப்படுகிறது.

நான்காம் கூறு: ஒவ்வொரு கீர்த்தனையும் ஒரு குறிப்பிட்ட உணர்வை மையமாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது. அந்த உணர்வை வெளிப்படுத்தும் இராகமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இது சாகித்ய-இராக ஒற்றுமையின் ஒரு பண்பாகக் கருதப்படுகிறது.

**முடிவுரை**

பாபநாசம் சிவனின் தமிழ்க்கீர்த்தனைகள் தமிழ் மொழியியலுக்கும் கர்நாடக இசையின் இராகபாவத்திற்கும் இடையிலான தொடர்பினை ஆய்வு செய்வதற்கான மாதிரிகளை வழங்குகின்றன. இவரது பாடல்களில் தமிழ் மொழியின் ஒலியியல் அமைப்பு இசை வெளிப்பாட்டின் செயற்பாட்டுக் கூறாகச் செயல்படுகிறது.

இப்பகுப்பாய்வின் முடிவுகள், பாபநாசம் சிவனின் கீர்த்தனைகள் தமிழ் மொழியின் இசைத்திறனை வெளிப்படுத்துவதோடு, இராகபாவத்தைப் பாதிக்கும் மொழியியல் அம்சங்களையும் கொண்டுள்ளன என்பதைக் காட்டுகின்றன. எனவே, இவரது பாடல்கள் தமிழிசை மற்றும் கர்நாடக இசையியலில் ஆய்வுத் தளமாகக் கருதப்படுதல் அவசியம்.

மேல்நோக்கு ஆய்வுகளுக்கான பரிந்துரைகள்: இந்த ஆய்வு மூன்று கீர்த்தனைகளை மட்டும் மையப்படுத்தியிருப்பதால், பாபநாசம் சிவனின் பிற கீர்த்தனைகளிலும் இதே பண்புகளை ஆய்வு செய்வது அவசியமாகும். மேலும், பிற தமிழிசைப் பாடலாசிரியர்களின் (எ.கா., கோபாலகிருஷ்ண பாரதியார், மறைமலையடிகள்) பாடல்களுடன் ஒப்பீடு செய்வதன் மூலம் இந்த முடிவுகளின் பொதுத்தன்மையைச் சோதிக்கலாம். தமிழின் பிற பேச்சுவழக்குகள் அல்லது இலக்கிய வடிவங்கள் இசை வெளிப்பாட்டை எவ்வாறு பாதிக்கின்றன என்பதும் எதிர்கால ஆய்வுக்குரிய தலைப்பாகும்.

**துணைநூற்பட்டியல்**


1. சங்கீத வித்துவசபை. (1930—இதுவரை). *Journal of the Music Academy Madras.* சென்னை: சங்கீத வித்துவசபை.
2. சாம்பமூர்த்தி, P. (1952). *A Dictionary of South Indian Music and Musicians (Vol. A—F).* மதராஸ்: இந்தியன் மியூசிக் பப்ளிஷிங் ஹவுஸ்.
3. சாம்பமூர்த்தி, P. (1973). சங்கீத புஸ்தகம் (Vols. 1—4). சென்னை: தி இந்தியன் மியூசிக் பப்ளிஷிங் ஹவுஸ்.
4. சைதன்யா தேவா, B. (1973). *An Introduction to Indian Music.* புதுதில்லி: இந்திய அரசு, தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகம், வெளியீட்டுப் பிரிவு.
5. சுந்தரம், வி. பா. க. (1994—2000). தமிழிசை கலைக்களஞ்சியம் (Vols. 1—4). சென்னை: பாரதிதாசன் பல்கலைக்கழகம் / தமிழிசை ஆராய்ச்சி பதிப்பகம்.
6. பாபநாசம்சிவன். (1939). கீர்த்தனை மாலை (Vol. 1). சென்னை: ப்ரஹ்ம ஞான பிரசுராலயம்.

7. மீனாக்ஷிசுந்தரம், T. P. (1965). *A History of Tamil Language*. பூனே: டெக்கன் கல்லூரி முதுநிலை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்.
8. விஷ்வநாதன், T., & அலன், M. H. (2004). *Music in South India: The Karṇāṭak Concert Tradition and Beyond*. நியூயார்க்: ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பதிப்பகம்.

***Bibliography***

1. Sangita Vidyavati Sabha. (1930—present). *Journal of the Music Academy Madras*. Chennai: Sangita Vidyavati Sabha.
2. Sambamoorthy, P. (1952). *A Dictionary of South Indian Music and Musicians* (Vol. A—F). Madras: Indian Music Publishing House.
3. Sambamoorthy, P. (1973). *Sangita Pusthakam* (Vols. 1—4). Chennai: The Indian Music Publishing House.
4. Chaitanya Deva, B. (1973). *An Introduction to Indian Music*. New Delhi: Publications Division, Ministry of Information and Broadcasting, Government of India.
5. Sundaram, V. P. K. (1994—2000). *Tamil Isai Kalai Kalanjiyam* (Encyclopaedia of Tamil Music) (Vols. 1—4). Chennai: Bharathidasan University / Tamil Isai Research Publications.
6. Papanasam Sivan. (1939). *Kirtanai Malai* (Garland of Kirtanas) (Vol. 1). Chennai: Brahma Gnana Prasuralayam.
7. Meenakshisundaram, T. P. (1965). *A History of Tamil Language*. Pune: Deccan College Postgraduate and Research Institute.
8. Viswanathan, T., & Allen, M. H. (2004). *Music in South India: The Karṇāṭak Concert Tradition and Beyond*. New York: Oxford University Press.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com